DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | வடிவேல் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | கருப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் மேட்டு மகாதானபுரத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) 18.01.2022 பகல் 03.30 மணி அளவில் கரூர்– திருச்சி ரோட்டில சிந்தலவாடி பிரிவு ரோடு அருகே லாலாப்பேட்டை காவல் நிலைய அதிகாரிகள் வரைபடம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

2. முதல்நாள் நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்து வரைபடம்போட்டார்கள். என்னுடன் இன்னொருவர் கையொப்பம் போட்டார் பக்கத்து ஊர்க்காரம் ஆனால் அவர் பெயர் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்து போன மணி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் பக்கத்து ஊரைச்சேர்ந்தவர். சம்பவ இடத்தில் நான் இருக்கும்போது

எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 5 அல்லது 6 நபர்கள் இருந்தார். போலிசார் வந்து வரைபடம் வரைந்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வரைபடம் தான் சம்பவ இடத்தில வரைந்தததாகும் இதில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை.

2. நான் கையொப்பம் செய்த தாள் எழுதப்பட்டு இருந்ததா எழுதாமல் இருந்ததா என்றால் எழுதப்பட்டு இருந்தது. அந்த தாளில் எழுதப்பட்ட விவரத்தை என்னால் சொல்லமுடியமா என்றால் முதல் நாள் நடந்த விபத்திற்கு நாங்கள் வரும் போது போலிசார் வரைபடம் வரைந்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது மற்ற விசயங்கள் பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் வரைபடம் வரைந்தார்கள் என்று எழதப்படவில்லை.

3. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் இறந்து போன மணி என்பவர் பக்கத்து ஊரைச்சேர்ந்தவர் என்பதால் அவருக்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 10:53:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.